
# கதை கதையாம் காரணமாம்



**தமிழ் ஐயா வெளியீட்டகம்**
ஔவைக்கோட்டம், திருவையாறு - 613 204
தஞ்சாவூர் மாவட்டம்.

## நூல் விவர அட்டவணை


| | | |
|---|---|---|
| தலைப்பு | : | கதை கதையாம் காரணமாம் |
| வகை | : | கதைத் தமிழ் ஆய்வு |
| பதிப்பாசிரியர் | : | க. கண்ணகி (பேசி : 94867 42503) |
| முதல்பதிப்பு | : | திருவள்ளுவராண்டு 2046 (சூலை, 2015) |
| பதிப்புரிமை | : | தமிழ் ஐயா வெளியீட்டகம், திருவையாறு |
| நூல் அளவு | : | டெம்மி 1x8 |
| I.S.B.N. எண் | : | 978-81-930633-0-09 (V-IV) |
| எழுத்து அளவு | : | 11 |
| பக்கங்கள் | : | 528 |
| படிகள் | : | 500 |
| கட்டுமானம் | : | சாதாரணம் |
| விலை | : | ரூ. 500/- |
| கணினி அச்சு | : | செ.தீபா (கிரியேட்டர் கிராபிக்சு) சிவகாசி |
| அச்சாக்கம் | : | செல்வவிநாயகம் அச்சகம், சென்னை. |


கோவை கொங்கு நாடு கலை அறிவியல் கல்லூரியுடன் இணைந்து திருவையாறு தமிழ் ஐயா கல்விக் கழகம் **11-07-2015** அன்று நடத்திய அனைத்துலக அளவிலான கதைத் தமிழ் 13- ஆவது ஆய்வு மாநாட்டுக் கருத்தரங்கில் படித்தளிக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு.

## ஈ. கதைக் கதம்பம்


74. சிலப்பதிகாரக் கதைகளில் கதைக்கரு
முனைவர் இரா.அபிமன்யு 384

75. சிவப்பெருமானின் தோற்றப் பொலிவும் அணிகலன் அமைப்பும் உணர்த்தும் கதை
பா.புனிதம் 390

76. பெரியபுராணத்தில் கழற்றறிவார் நாயனார் (சேரமான் பெருமாள் வரலாறு உணர்த்தும் அறச்சிந்தனைகள்)
சு. மலர்விழி 394

77. காரைக்காலம்மையார் பாடல்களில் புராணம் கதைக் குறிப்புகள்
தமிழ்மாமணி திருமேனி நாகராசன் 399

78. இதிகாசங்களில் விளையாட்டுகள் பற்றிய கதைகள்
முனைவர் வீ.உமா 404

79. பேரூர்ப்புராணம் அரசர் கதைகள் உணர்த்தும் பொருண்மை
முனைவர் சு.ஞானப்பூங்கோதை 409

80. நடுகல் வளர்ந்த கதையும் வழிபாடும்
ப. கலைச்செல்வன் 415

81. மோகனூர் நாவலடியான் கதை
மோ.ச.மகேசுவரி 420

82. சித்தர் வழிகாட்டும் செந்தமிழ்க் கதை
பா. உதயக்குமார் 426

83. திருக்கோயில்களின் கதை வரலாறும் மனித வாழ்வும்
முனைவர் கா. ஆனந்தி 431

84. திருக்கோயில்களில் காணலாகும் மரபுவழிக் கதைகள் திருக்கோளூர் வைத்தமாநிதிப் பெருமாள் கோயில்
மா. பாலாராணி 435

85. திருவாணைக்கா அருள்மிகு சம்புகேசுவரரின் தோற்ற வரலாற்றுக் கதை
முனைவர் என். செல்வி 440

86. சித்தர்களின் வாழ்வியலும் கதை வெளிப்பாடும்
சு. செல்வி 445

87. சிறி சீரடி பாபுவின் குரு நம்பிக்கையுணர்த்தும் கதை
வி. விட்ணுபிரியா 448

# 74. சிலப்பதிகாரக் கதைகளில் கதைக்கரு

முனைவர் இரா.அபிமன்
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை, சுயநிதிப்புலம்
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர்

## முன்னுரை

கோவலன் கண்ணகி கதை பன்னெடுங்காலமாக மக்களால் நன்கு அறியப்பட்ட கதை மக்களிடம் நன்கு அறிமுகமான இத்தகைய கண்ணகி கதை, காலந்தோறும் பல்வேறு இலக்கிய வடிவங்களில் வளர்ந்து வந்துள்ளது கவிதை, நாடகம், வில்லுப்பாட்டு, கதைப்பாடல், வசனநடை முதலிய இலக்கியவடிவங்களில் வளர்ச்சிப; பெற்றுள்ள கோவலன் கண்ணகி கதைகள் உருவ, உள்ளடக்கத்தில் நிறைய மாற்றங்களைப் பெற்றுள்ளது என்னும் காலமாற்றம், பண்பாட்டு மாற்றங்களுக்கு உட்பட்ட இச்சிலப்பதிகார இலக்கிய வடிவங்களில், நிலைத்த தன்மை கொண்ட கதைக் கருவினைக் காணமுடிகின்றது.

ஓர் அபலைப் பெண்ணான கண்ணகிக்கு நேர்ந்த சோக முடிவு எனும் கதை கருவைச் சுற்றிப் பற்பலக் கதைநிகழ்ச்சிகள் சிலம்பிலும், நாட்டுப்புற கதைப் பாடல்களிலும் பின்னப்பட்டுள்ளது. இம்மாதிரியானக் கதை நிகழ்ச்சிகளால் கதையமைப்பில் வேறுபாடுகள் காணப்பட்டாலும், கதைக்கரு, மூலக்கதை வடிவங்களில் சிதைவில்லாத ஒத்தத்தன்மையை அறியமுடிகிறது. சிலம்புக் கதைகளில் அமைந்துள்ள கதைநிகழ்வு, கதையமைப்புகள் அறியமுடிகிறது. சிலம்புக் கதைகளில் அமைந்துள்ள கதை நிகழ்வு மற்றும் கதையமைப்புகள் எவ்வாறு கதைக்கருவினைச் சுற்றி அமையப்பெற்றுள்ள என்பதை இக்கட்டுரை ஆராய்கிறது.

## சிலப்பதிகாரக் கதைகளில் பொதுவானக் கதையமைப்பு

சிலப்பதிகாரக் கதையமைப்புகளில் வணிகர் குடியைச் சேர்ந்த கோவலன் - கண்ணகியின் திருமணம் பெற்றோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணமாகவும், கணிகை மகளான மாதவியினால் பிரிவு ஏற்பட சிலம்புவிற்க வேண்டி கோவலன், கண்ணகி மதுரைப் பயண நிகழ்வும், பொற்கொல்லன் சாதியால் கோவலன் கொலைபடுவது, கண்ணகி பாண்டியர்களைப் பழிதீர்த்து, மதுரையைத் தீக்கிரையாக்குவது பின்பு மக்களால் வழிபடும்